10/=

Registered as a Newspaper in Srilanka


# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 112 வியாழக்கிழமை செப்ரெம்பர் 07 2017 ethirolimedia@gmail.co... 48 48

## முள்ளிவாய்க்காலில் மிரட்டிய விமானம்

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன் பகுதியில் இன்று இலங்கை விமானப் படையினருக்குச் சொந்தமான போர் விமானம் ஒன்று மிகத் தாழ்வாகப் பறந்துள்ளது. மிகவும் அச்சுறுத்தும் இரைச்சலுடன் குறித்த விமானம் தாழ்வாகப் பறந்து வட்டமிட்டதால் அப்பகுதியில் பொதுமக்கள் மத்தியில் சற்றுப்

06



## மகிந்த மீது நம்பிக்கை உள்ளது



"நாடாளுமன்றத்தில் கூட்டு எதிரணியினர் தனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தால், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நிச்சயமாக அதற்கு ஆதரவாக வாக்களிக்கமாட்டார்" என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

"சர்வதேச நீதிப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதாக, ஐ.நா. பொதுச்செயலர் பான் கீ மூனுக்கு இணக்கம் தெரிவித்தவர் மகிந்த ராஜபக்ச தான். நான் சர்வதேச நீதிமன்றத்தைப்

06

## பொன்சேகாவுக்கு பைத்தியமா?



"அமைச்சர் சரத் பொன்சேகா ஒரு பைத்தியம்" என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ச நாடாளுமன்றத்தில் ஆவேசத்துடன் கூறியுள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில், ஜெனரல் ஜயசூரிய மீது பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சுமத்தியுள்ள குற்றச்சாட்டுத் தொடர்பாக தினேஸ் குணவர்த்தன கேள்விகளை எழுப்பியிருந்தார். இததையடுத்து, நடந்த விவாதத்தில் ஆவேசமாக உரையாற்றிய விமல் வீரவன்ச, " அமைச்சர் சரத் பொன்சேகா என்ன பைத்தியமா? முன்னாள் இராணுவ ஜெனரல் ஒருவர் போர்க்குற்றங்களை இழைத்தார் என்று அமைச்சர் ஒருவர் குற்றம்சாட்டுவது ஒன்றும் சிறிய விடயமல்ல. அவர் ஒரு பைத்தியக்காரன்" - என்றார்.(எ)

## 200 ஆவது நாள் போராட்டம்



கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் காணாமல் போனவர்களின் உறவினர்களால் ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டம் இன்று வியாழக்கிழமை 200ஆவது நாளைத் தொட்டுள்ளது.

எனினும் தீர்வுகள் எதுவுமின்றி போராட்டம் தொடர்ந்து இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது. கிளிநொச்சி மாவட்டத்தில் காணாமல் போனவர்களின் விடுதலையையும், வெளிப்படுத்தலையும் வலியுறுத்தி உறவினர்களால் கடந்த பெப்ரவரி 20 ஆம் திகதி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பல

06

## வடக்கு அவையில் 20 நிராகரிப்பு




திருத்தம் செய்தால் பரிசீலிக்க முடிவு

20ஆவது திருத்தச் சட்டமூலத்தை வடமாகாண சபை நிராகரித்துள்ளது. எனினும், அதில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டால் அது தொடர்பில் பரிசீலனை செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகளுக்கான தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துவதற்கான 20ஆவது திருத்த சட்டம் கடந்த 4ஆம் திகதி வட மாகாணசபையில் ஆராயப்பட்ட

06

## செம்மணிப் படுகொலை கிருசாந்தி நினைவுநாள்



யாழ்ப்பாணம் செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட கிருசாந்தியின் 21 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று செம்மணியில் அனுஷ்டிக்கப்பட்டது.

06



## நடைபாதை வியாபாரத்துக்கு தடை

பண்டிகைக் காலங்களில் நடைபாதை வியாபாரம் செய்வதைத் தடுக்கும் பிரேரணை வடக்கு மாகாணசபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த பிரேரணையை முன்மொழிந்து உரையாற்றிய மாகாணசபை உறுப்பினர் ஜெயசேகரம்,

"தென்னிலங்கை மற்றும் இந்திய வியாபாரிகள் பண்டிகைக் காலங்களில் வடக்குக்கு வந்து நடைபாதை வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

இதனால் இங்குள்ள வர்த்தகர்கள் பாதிக்கப்படுகின்றனர். வாடகை, மின்சாரம், வரி எனப் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து இங்குள்ள வர்த்தகர்கள் தொழில்செய்துவருகின்றனர். பண்டிகைக்கால வியாபாரமே அவர்களுக்கு ஆறுதலைத் தரும் ஆனால், அதிலும் பிறர்வந்து கைவைப்பது நியாயமற்ற செயல்" என்றார்.

இதற்குப் பதிலளித்து உரையாற்றிய முதலமைச்சர், "பண்டிகைக்கால நடைபாதை வியாபாரங்களைத் தடைசெய்யும் நியதிச்சட்டம் ஒன்று விரைவில் கொண்டுவரப்படும்" என்றார். (எ-01)

## ஒழுங்கற்று நடக்கின்றனர்



"வட மாகாண சபையின் அமைச்சர்கள் உள்ளிட்ட உறுப்பினர்கள், சபை ஒழுங்கு முறைகளை உரிய முறையில் பின்பற்றி நடக்க வேண்டும்" என அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வட மாகாண சபையின் 105ஆவது அமர்வு, கைதடியிலுள்ள மாகாண பேரவைச் செயலகத்தில் பேரவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தலைமையில் இன்று நடைபெற்றது.

இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது, சபை அறிவிப்புகளை விடுத்த

06

## மகிந்தவின் சகாக்களுக்குச் சிறை

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் அனுஷ பல்பிட்ட ஆகியோருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம், தலா மூன்று வருட சிறைத்தண்டனையும் தலா 100 மில்லியன் ரூபா தண்டப் பணமும் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன், தொலைத் தொடர்புகள்

06





# அரச பணியாளர் வேலை நேரம் மாற்றம்

அரசாங்கப் பணியாளர்களின் அலுவலக நேரங்களில் மாற்றம் செய்யப்படவுள்ளது. பத்தரமுல்ல பிரதேசத்தில் செயற்படும் அரசாங்க நிறுவனங்களின் அலுவலக நேரங்கள் மாற்றப்படவுள்ளதாகப் பொது நிர்வாகம் மற்றும் நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி முதல் காலை 7.15 மணி முதல்பி.ப. 3.15 மணி வரை என்ற காலப்பகுதிக்கு நேரம் மாற்றப்படவுள்ளதாக அமைச்சு நேற்று சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகப் பெருநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் போக்குவரத்து அமைச்சகத்தின் செயலாளர் ஜே. ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

"இது ஒரு பைலட் திட்டமாகும். இது பெருநகர அமைப்பால் முன்னெடுக்கப்படும் முன்னுரிமை பஸ் பாதைத் திட்டத்துடன் கைகோர்த்து செயற்படுவதாக" அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

# சகலருக்கும் காணி உறுதி



காணி வசதிகள் இல்லாத சகலருக்கும் காணி வழங்குவதற்கு அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அங்கு உரையாற்றிய அவர்,

"இதற்காக 20 லட்சம் காணி உறுதிகள் வழங்கப்படும். அரசியல் யாப்பின் மீதான 13ஆவது திருத்தத்தில் காணிகளை எவ்வாறு பகிர்வது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. விவசாயத்துக்கும், வீடமைப்புக்கும் காணிகள் அவசியம். கொழும்பில் காணிகளுக்கு பற்றாக்குறை நிலவுவதால் அடுக்குமாடிகள் அமைக்கும் தேவை எழுந்துள்ளது. எனவே, சமகால காணி கொள்கை குறித்து தீர்மானம் எடுப்பது அவசியமாகிறது. காணி வங்கியை அமைத்து சகல செயற்பாடுகளையும் சீர்செய்ய முடியும் என்று குறிப்பிட்டார். (உ)

# அழைப்பை நிராகரித்தார் ஹெகலிய



அரசாங்கத்தில் இணைந்துகொள்ளப் போவதில்லை என முன்னாள் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் இணைந்து கொண்டு அமைச்சுப் பதவியொன்றை ஏற்றுக்கொள்ளப் போவதாக வெளியான தகவல்கள் குறித்து கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர்,

"ஆளும் கட்சியுடன் தொடர்புடைய தரப்பினர் என்னை அரசாங்கத்தில் இணைந்து கொண்டு அமைச்சுப் பதவியொன்றை பெற்றுக் கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துவருகின்றனர். இவ்வாறு அழைப்பு விடுக்கும் தரப்பினர் எதிர்காலத்தில் ஆளும் கட்சியில் இணைந்து கொள்வோர் பட்டியலில் எனது பெயரையும் இணைத்தே தகவல் வெளியிட்டு வருகின்றனர்.

"எனினும், நான் எச்சந்தர்ப்பத்திலும் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளப் போவதில்லை." - என்றார். (உ)

# மக்கள் ஆதரவற்றவரின் கருத்துக்குப் பதிலளியேன்





மக்களின் ஆரதவில்லாமல் வேறு ஒருவரின் புண்ணியத்தினால் நாடாளுமன்றத்துக்கு வந்த அமைச்சரின் கருத்துக்குப் பதிலளிக்கப்போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சரண குணவர்தனவின் சுகதுக்கம் விசாரிக்க மகிந்த ராஜபக்ச இன்று சிறைச்சாலைக்குச் சென்றிருந்தார். இதன்போது அமைச்சர் சரத் பொன்சேகாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தால் அவருக்கு எதிராக வாக்களிப்பீர்களா? என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்குப் பதிலளித்த மகிந்த ராஜபக்ச, அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை யாரும் கொண்டுவருவார்கள் என நான் நினைத்துக்கூடப்பார்க்கவில்லை. அவர் மக்களின் ஆதரவு மூலம் நாடாளுமன்றத்துக்கு வராமல் யாரோ ஒருவரின் உதவியில் உள்நுழைந்து அமைச்சரானவர்" - என்றார். (உ)

# தசநாயக்கவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பீ தசநாயக்கவின் விளக்கமறியல் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இளைஞர்கள் காணாமல்போன சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் நடத்தி வரும் விசாரணைகளின் அடிப்படையில் தசநாயக்க கைது செய்யப்பட்டிருந்தார்.

தசநாயக்க உள்ளிட்ட ஆறு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 14ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி எதிர்வரும் 25ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு கோட்டே நீதவான் லங்கா ஜயரட்ன, புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

2008ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 8ஆம் திகதி தொடக்கம் 2008ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி வரையில் 11 இளைஞர் காணாமல் போயிருந்தனர்.

கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் குறித்த இளைஞர்கள் கடத்தப்பட்டிருந்தனர். சம்பவத்துடன் தொடர்புடையதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள கடற்படையின் முன்னாள் பேச்சாளர் தசநாயக்க நேற்று நீதிமன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை. உடல் நிலை பாதிப்பினால் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை எனச் சட்டத்தரணி ஊடாக அறிவித்திருந்தார்.

இதேவேளை தசநாயக்கவின் உடல் நிலை தொடர்பான மருத்துவ அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (உ)

# இறைவரித் திருத்தம் இரண்டாம் வாசிப்பு

உள்நாட்டு இறைவரித் திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இன்று இடம்பெற்றது.

கடந்த ஜூலை மாதம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குறித்த சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் பின்னர் குழுநிலை விவாதம் இன்றுடன் நிறைவு செய்யப்பட்டது. புதிய சட்டமூலத்தின் ஊடாக ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களின் பணம் மற்றும் வெளிநாட்டில் உள்ளவர்கள் நாட்டுக்கு அனுப்பும் பணம் ஆகியவற்றுக்கு எவ்வித வரியும் அறவிடப்படமாட்டாது என்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சு கூறியுள்ளது. அதேவேளை சில வரி முறைகளுக்கு பதிலாக மூன்று வகையான எளிய முறை வரிகளை அறவிடுவதே சட்டமூலத்தின் மூலம் யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது. வருமான வரிக்கு தற்போது நடைமுறையில் இருக்கின்ற 750,000 ரூபா என்ற வரி விலக்கு பெறுமதி 12 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட உள்ளதாகவும் அந்த அமைச்சு கூறியுள்ளது. (உ)



# ஆட்கடத்தல் தடுப்பு ஒப்பந்தம் கைச்சாத்து

ஆட்கடத்தலுக்கு எதிரான நடவடிக்கையில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையிலான புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றில், ஆஸ்ரேலியாவும் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளன. கன்பராவில், நேற்று நடந்த நிகழ்வில், ஆஸ்ரேலியாவின் சார்பில் குடிவரவு மற்றும் பாதுகாப்புத் திணைக்களத்தின் செயலர் மைக்கேல் பெசுலோவும், இலங்கையின் தரப்பில் பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்னவும் இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

ஆட்கடத்தல் செயற்பாடுகளுடன் தொடர்புடைய நபர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கும், ஆட்கடத்தல் முறைகள் பற்றிய தகவல்களை பரிமாறிக் கொள்ளவும், இடைமறித்தல் மற்றும் ஆட்கடத்தல்காரர்களை விசாரணை செய்வதற்கும், இந்த உடன்பாடு வழிசெய்கிறது.

ஆட்கடத்தலை தடுக்கும் நடவடிக்கைகளுக்கு இலங்கை அதிகாரிகளுக்கு ஆஸ்ரேலியா பயிற்சிகளை அளித்து அவர்களின் திறனை பலப்படுத்தவும் இந்த உடன்பாடு வழி செய்கிறது. (உ)

# கிழக்கு அவையில் கண்டனத் தீர்மானம்



மியான்மரில், ரோஹிங்யா முஸ்லிம்கள் படுகொலை தொடர்பான விசேட கண்டனத் தீர்மானம், கிழக்கு மாகாண சபையில், இன்று நிறைவேற்றப்பட்டது. மாகாண சபை அமர்வு, மு.ப. 10 மணியளவில், தவிசாளர் சந்திரதாச கலப்பதி தலைமையில் கூடியபோது, இதற்கான விஷேட பிரேரணையை எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ்.உதுமாலெப்பை சமர்ப்பித்தார். இதனை வழிமொழிந்து உறுப்பினர் ஆர்.அன்வர் உரையாற்றினார்.

இந்தத் தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், விவாதமின்றி, பிரதமர், ஜனாதிபதி உள்ளிட்டவர்களுக்கு அனுப்பி வைப்பதாக தவிசாளர் சபையில் அறிவித்தார்.

மியான்மர் பிரதேசத்தில், ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அதனைத் தடுக்க ஐக்கிய நாடுகள் உள்ளிட்ட மனித உரிமை அமைப்புக்களுக்கு இத்தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் அனுப்ப வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார். (உ)

# இரசாயனக் குண்டு: உடைந்தது உண்மை



சிரிய அரசுப்படைகள் உள்நாட்டுப்போரின் போது 'சரின்' என்னும் விஷவாயுவை, மக்கள் மீது வீசியதாக ஐ.நா. போர்க் குற்ற விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
சிரிய அரசு கடந்த ஏப்ரல் மாதத்தில் 'கான் ஷேக்கோம்' எனும் இடத்தில் மக்கள் மீது இரசாயனக் குண்டை வீசியதில் 80 பேர் இறந்தனர். இதையடுத்து அமெரிக்கப் படைகள் சிரிய இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் நடத்தின.
மேலும் ஐ.நா. போர்க் குற்ற விசாரணை ஒன்றையும் நடத்த உத்தர விட்டது. இதன் அறிக்கை இப்போது வெளியிடப்பட்டுள்ளது.
ஐ.நா. அறிக்கையில் 33 முறை இரசாயன ஆயுதங்களைச் சிரியாவில் பயன்படுத்தியதன் விவரங்களைத் தொகுத்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதில் அரசுப்படைகள் 27 முறை வீசியுள்ளன. ஆறு முறை அவற்றை வீசிய குற்றவாளிகள் யார் என்பதை அறிய முடியவில்லை என்றும் கூறியுள்ளது.
சிரியாவின் அஸாத் அரசு மீண்டும் மீண்டும் 'சரின்' வாயுவை வீசியதை மறுத்து வந்தது. அரச படைகள் நடத்திய தாக்குதலின் போது, போராளிகள் வைத்திருந்த இரசாயன ஆயுதங்களே வெடித்ததாக அஸாத் அரசு கூறி வருவது குறிப்பிடத்தக்கது.(இ)




# ரோஹிங்யாக்களை பாதுகாக்கிறோம்

மியான்மரில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள ரோஹிங்யா நெருக்கடி தொடர்பாக, அந்த நாட்டின் நடைமுறைத் தலைவர் ஆங் சான் சூசி முதல்முறையாகக் கருத்து வெளியிட்டுள்ளார். தன்னுடைய அரசு ரக்கைன் மாநிலத்திலுள்ள அனைவரையும் பாதுகாத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். ஆனால், பயங்கரவாதத்தின் நலன்களை ஊக்குவிக்கும் வகையில் மோதல் பற்றி பரப்பப்படும் "மிக பெரிய பனிப்பாறை போன்ற தவறான தகவல்களை" அவர் விமர்சித்துள்ளார்.
துருக்கி அதிபர் ரசெப் தாயிப் எர்துவானோடு தொலைபேசியில் பேசியபோது ஆங் சான் சூசி இந்தக் கருத்துக்களைக் கூறியதாக ஆங் சான் சூசியின் அலுவலகம் தெரிவித்துள்ளது. சமீபத்தில் நடைபெற்ற தொடர் மோதல்களால், ரோஹிங்யா முஸ்லிம்கள் நாட்டைவிட்டு அதிகளவில் வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.
மியான்மரின் வடக்கிலுள்ள ரக்கைன் மாநிலத்தில் இருந்து கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் ஒரு லட்சத்து 23 ஆயிரத்துக்கும் மேலான ரோஹிங்யா முஸ்லிம்கள் வெளியேறி பங்களாதேஷ் சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# டிரம்ப் மீது ஒபாமா பாய்ச்சல்!



அமெரிக்காவில் சிறுபருவத்தில் சட்டவிரோதமாகக் குடியேறிய 8 லட்சம் பேருக்கு வழங்கிய பொது மன்னிப்பை ரத்துசெய்ய, ஜனாதிபதி டிரம்ப் நடவடிக்கை எடுத்துள்ளார். இதற்கு முன்னாள் ஜனாதிபதி ஒபாமா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.
அமெரிக்காவில் முறையான சட்ட ஆவணங்கள் ஏதுமின்றி சிறுவயதிலேயே குடியேறிய 8 லட்சம் பேருக்கு முந்தைய ஒபாமா அரசு பொது மன்னிப்பு வழங்கியது. இந்தப் பொது மன்னிப்பை பெற்ற அவர்கள், அமெரிக்காவில் வேலை பார்க்கின்றனர். திருமணமாகி குடும்பம் நடத்துகின்றனர். தொழில் செய்கின்றனர். வியாபாரம் செய்கின்றனர். ஆனால், திடுதிப்பென்று அவர்களுக்கு வழங்கிய பொது மன்னிப்பை ரத்து செய்து டிரம்ப் நிர்வாகம் நேற்று முன்தினம் அதிரடியாக ஒரு அறிவிப்பை வெளியிட்டது. இதற்கு எதிராக வோஷிங்டனில் வெள்ளை மாளிகைக்கு வெளியே உடனடியாகப் போராட்டம் நடந்தது.
டிரம்ப் நிர்வாகத்தின் இந்தத் திடீர் நடவடிக்கைக்கு முன்னாள் ஜனாதிபதி ஒபாமா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.
"இளம் வயதினர் மீது குறிவைத்துள்ள இந்த நடவடிக்கை தவறானது. ஏனென்றால் அவர்கள் எந்தத் தவறும் செய்யவில்லை. இது நம்மை நாமே தோற்கடிப்பதற்குச் சமமானது. இந்த நடவடிக்கை சட்டபூர்வமாகத் தேவையற்றது. இந்த நடவடிக்கை அமெரிக்க உணர்வுக்கு எதிரானது. இதை அமெரிக்க நிர்வாகம் செய்திருக்கக்கூடாது என்பதுதான் அனைத்துத் தரப்பினரின் கருத்தாகவும் உள்ளது"என்று ஒபாமா தெரிவித்துள்ளார். (இ)

# மெரினாவில் தியானப் போர்

'நீட்' தேர்வில் இருந்து விலக்கு அளிக்க கோரியும், மாணவி அனிதா மரணத்துக்கு நீதி கேட்டும் சென்னையிலும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் மாணவர்கள் நடத்திவரும் போராட்டம் தீவிரத் தன்மையை எட்டியுள்ளது.
ஜல்லிக்கட்டு போராட்டத்துக்காக மாணவர்கள் மெரினா கடற்கரையில் திரண்டது போல், தற்போதும் கூடி போராட்டத்தில் ஈடுபடக்கூடாது என்பதற்காக அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.
இந்த நிலையில், இந்திய ஜனநாயக மாணவர் சங்கத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவ-மாணவிகள் 27 பேர் நேற்று மதியம் 2.30 மணி அளவில் தனித் தனியே ஜெயலலிதா சமாதி இருக்கும் பகுதிக்குள் நுழைந்தனர்.
பின்னர் அங்கு குழுவாகச் சேர்ந்த அவர்கள், ஜெயலலிதா சமாதி அருகே வைக்கப்பட்டு இருந்த இரும்புத் தடுப்புகளையும் தாண்டி சமாதி முன் சென்று தரையில் அமர்ந்து 'நீட்' தேர்வுக்கு விலக்கு கோரியும், மாணவி அனிதா மரணத்துக்கு நீதி கேட்டும் போராட்டத்தில் ஈடுபட தொடங்கினர். மாணவ-மாணவிகள் திடீரென்று போராட்டத்தில் ஈடுபட்டதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.
அவர்களைக் கலைந்து செல்லுமாறு பொலிஸார் கூறினார்கள். அதற்கு அவர்கள், "நாங்கள் போராட வரவில்லை, 'நீட்' தேர்வுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்த மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் கோரிக்கை வைக்கும் வகையில் தியானத்தில் ஈடுபட வந்துள்ளோம்" என்று கூறித் தியானத்தில் ஈடுபட்டனர்.பின்னர் மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டு, மாணவர்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்.(இ)



# பாகிஸ்தானின் தந்திர அறிக்கை



பாகிஸ்தான் நாட்டிலிருந்து செயற்படும் தீவிரவாதக்குழுக்களைச் சுட்டிக்காட்டி பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட அறிக்கைக்கு , பாகிஸ்தான் குழப்பமான ஆனால் எச்சரிக்கையுடன் எதிர்வினையாற்றியுள்ளது.
பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் நஃபீஸ் ஜகாரியா இது குறித்து வெளியிட்ட அறிக்கையில், "ஆப்கானில் செயல்படும் டிடிபி, அதன் கூட்டாளிகளான ஜமாதுல் அஹ்ரார் உட்பட பல பயங்கரவாதக் குழுக்கள் பாகிஸ்தான் மக்கள் மீது மிகவும் தீவிரமான வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றன. மேலும் நாங்கள் டாயேஷ் (ஐஎஸ்), இடிஐஎம், ஐஎம்யு ஆகிய பயங்கரவாதக் குழுக்களின் இருப்பு குறித்தும் ஆழமாகக் கவலையடைந்துள்ளோம். இவர்களால் இந்தப்பகுதியின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது." என்று கூறியுள்ளது.
ஆனால் ஹக்கானி நெட்வொர்க், லஸ்கர் இ தொய்பா, ஜேஇஎம், ஆகிய தீவிரவாத அமைப்புகள் குறித்து இவரது அறிக்கையில் எந்த வித குறிப்புகளும் இல்லை. இந்த அமைப்புகள் மீதுதான் ஆப்கானிஸ்தான், அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகள் குற்றம்சாட்டியிருந்தன. ஆனால் இவை பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிடாதது ஆச்சரியமளித்தது என்பதை விட குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.
முன்னதாக பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் குர்ரம் தஸ்தகீர் கான் பயங்கரவாதம் குறித்த பிரிக்ஸ் தீர்மானத்தை நிராகரிப்பதாகக் கூறியிருந்தார். (இ)

# மிரட்டும் 'இர்மா'



அட்லாண்டிக் கடற்பரப்பில் 'இர்மா' என்று பெயரிடப்பட்ட பயங்கரமான சூறாவளி உருவாகி, கரீபியன் தீவுகளான பர்புடா , ஆண்டிகுவாவை என்பவற்றைத் தாக்கி, அமெரிக்காவை நோக்கி நகரத் தொடங்கியுள்ளது.
அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தை இந்தப் படுபயங்கர சூறாவளி இந்த வார இறுதியில் தாக்கவுள்ளது.
அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் புளோரிடா மாகாணத்தில் நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்துள்ளார்.
கடந்த வாரம் ஹூஸ்டனைப் புரட்டி எடுத்து நாசம் செய்த ஹார்வி புயல் 4 ஆம் எண் புயல் என்றே அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் இர்மா அதை விடவும் பயங்கரமானது என்பதால் 5 ஆம் எண் என்று வகைப் படுத்தப்பட்டுள்ளது. இர்மா சூறாவளியால், பாரதூரமான சேதங்கள் ஏற்படலாம் எனக் கூறப்படுகின்றது. எனவே, அவற்றில் இருந்து மக்களைக் காக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.
இதேவேளை, கரீபியன் தீவுகளில் 'இர்மா' சூறாவளியால் ஆறுபேர் பலியாகியுள்ளனர்.' இர்மா' சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒரு வாரத்துக்கு மின்சாரம் இருக்காது என்றும் கூறப்பட்டுள்ளது. (இ)





## உலகக் கிண்ணத்துக்குத் தகுதி பெறுவதில்

# சிக்கல்

2018ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடருக்கான தகுதிகாண் சுற்றுப் போட்டிகள் பல்வேறு நாடுகளில் நடந்து வருகின்றன. இதில் தென்னமெரிக்கக் கண்டத்துக்கான தகுதிச் சுற்றில் 10 அணிகள் பங்கேற்றுள்ளன.

ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா 2 தடவைகள் மோத வேண்டும். இதன் முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் நேரடியாக உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெறும். 5ஆவது இடம் பெறும் அணி 'பிளே-ஓப்' சுற்றில் வெற்றிபெற்றால் தகுதி பெற முடியும்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு நடந்த வெனிசுலாவுக்கு எதிரான ஆட்டத்தில் முன்னாள் சம்பியன் அர்ஜென்ரீனா, 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையைக் கண்டது. அதுவும் வெனிசுலா அணி அடித்த சுய கோல்தான் ஆர்ஜென்ரீனாவைத் தோல்வியிலிருந்து காப்பாற்றியது.

மற்றொரு ஆட்டத்தில் சிலி அணி 0-1 என்ற கோல் கணக்கில் பொலிவியாவிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்தது. ஏனைய ஆட்டங்களில் உருகுவே 2-1 என்ற கோல் கணக்கில் பராகுவேயையும், பெரு அணி 2-1 என்ற கோல் கணக்கில ஈகுவடாரையும் வீழ்த்தின. பிரேஸில்-கொலம்பியா அணிகள் இடையிலான ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தன.

இன்னும் 2 லீக் ஆட்டங்கள் எஞ்சியிருக்கும் நிலையில் இந்தப் பிரிவிலிருந்து பிரேஸில் அணி (37 புள்ளிகள்) மட்டும் தகுதி பெற்றிருக்கிறது. உருகுவே (27 புள்ளிகள்) 2ஆவது இடத்திலும், கொலம்பியா (26 புள்ளிகள்) 3ஆவது இடத்திலும், பெரு (24 புள்ளிகள்) 4ஆவது இடத்திலும் இருக்கின்றன.

ஆர்ஜென்ரீனா அணி 6 வெற்றிகள், 6 சமநிலை, 4 தோல்விகள் என 24 புள்ளிகளுடன் 5ஆவது இடத்திலும், சிலி அணி 23 புள்ளிகளுடன் 6ஆவது இடத்திலும் உள்ளன.

இதனால் இரு அணிகளும் நேரடியாக உலகக் கிண்ணத்துக்குத் தகுதி பெறுவதில் சிக்கல் உருவாகியுள்ளது. அடுத்த லீக் ஆட்டங்களில் ஆர்ஜென்ரீனா அணி, பெருவையும், ஈகுவடாரையும எதிர்கொள்கிறது. சிலி அணி, ஈகுவடார், பிரேஸில் அணிகளுடன் மோதவுள்ளது. (ஐ)

## "தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும்"



'பிக்பாஸ்' சண்டை, காதல், நகைச்சுவை என நகர்ந்துகொண்டிருந்தது.

இந்நிலையில், இன்றைய நிகழ்ச்சிக்கான 'ப்ரோமோ' வீடியோவில் 'பிக்பாஸ்' வீட்டில் உள்ள அனைவரும் கண்ணீர் சிந்தி அழுவது போன்ற காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

எதனால், அனைவரும் அழுகிறார்கள் என்று எதிர்பார்ப்பு கிளம்பியிருந்த நிலையில், கவிஞர் சினேகனின் தந்தை இன்று 'பிக்பாஸ்' வீட்டுக்கு வருவார் எனக் கூறப்படுகிறது.

90 வயதைக் கடந்த தனது தந்தையை கவிஞர் சினேகன், பல வருடங்கள் கழித்துப் பார்க்கிறாராம். சில பிரச்சினைகள் காரணமாகத் தனது தந்தையை விட்டுப் பல ஆண்டுகள் பிரிந்திருந்த சினேகன் தன் தந்தையை இன்று காண்கிறார்.

சோகம் நிறைந்த சினேகனின் தந்தை கதையைக் கேட்ட அனைவரும் துக்கம் தாளாமல் கதறி அழுகின்றனர் எனத் தகவல்கள் கசிந்துள்ளன. இது உண்மையா? இல்லையா? என்பதை இன்று நிகழ்ச்சியைப் பார்த்தே தெரிந்துகொள்ளவேண்டும்.

தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டி அருகே உள்ள புதுக்கரியப்பட்டி என்ற குக்கிராமத்தில் பிறந்த சினேகன், அவரது பெற்றோரின் எட்டாவது பிள்ளையாவார்.

மேலும், அவருடைய பள்ளிப்படிப்பின் போது நடைபெற்ற கவிதைப் போட்டியில் மாநில அளவில் முதலிடம் பெற்று, மறைந்த முதல்வர் டாக்டர். எம்.ஜி.ராமச்சந்திரனிடமிருந்து பரிசு பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.(ஒ)

## அரசியலில் கமல்



நடிகர் கமல்ஹாசன் பல்வேறு அரசியல் கருத்துக்களை தெரிவித்து வருகிறார்.

எனவே, கமல் தீவிர அரசியலில் இறங்கத் தயாராகி விட்டார் எனப் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

இந்நிலையில், கமல்ஹாசனை சென்னையில் உள்ள அவரது வீட்டில் நடிகர் எஸ்.வி.சேகர் நேற்றுச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்புக் குறித்து எஸ்.வி. சேகர் கூறுகையில்,

"நானும் கமலும் 40 வருடங்களாக நண்பர்கள். அதனால் அவரை இன்று (நேற்று) சந்தித்தேன். சமீப காலமாக அவர் பல்வேறு அரசியல் கருத்துக்களை கூறி வருகிறார். எனவே அவர் அரசியலுக்கு வர வேண்டும். கட்சி தொடங்க வேண்டும் என்று கூறினேன்.

"கமல் நேர்மையானவர். அவர் அரசியலுக்கு வருவது நல்லது. தமிழ்நாட்டுக்கு நேர்மையான அரசியல் தலைவர்கள் தேவை.

"மூப்பனார் அரசியல் கட்சி தொடங்கிய போது படித்தவர்கள் ஏராளமானோர் அவருக்கு ஆதரவு கொடுத்தார்கள். அதுபோல் கமல் கட்சி தொடங்கினால் படித்தவர்கள் ஆதரவு அவருக்குக் கிடைக்கும்.

"மக்களும் ஆதரவு கொடுப்பார்கள். எனக்கும் கமலுக்கும் ஒத்த கருத்துக்கள் ஏராளமாக உண்டு. எனவே, அவர் அரசியலுக்கு வருவதை நான் ஆதரிக்கிறேன்" என்றார். (ஒ)

## 17இல் முதல் ஆட்டம்



பங்களாதேஷ் அணியுடனான டெஸ்ட் தொடரை முடித்துக்கொண்டு அங்கிருந்து இந்தியாவுக்கு செல்லவுள்ளது ஸரீபன் ஸ்மித் தலைமையிலான ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி.

அங்கு 5 ஒருநாள்போட்டிகள்மற்றும்மூன்று 'இருபது-20' போட்டிகளில் விளையாடவுள்ளது. இந்தத் தொடருக்கான இடங்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில் திகதி முடிவாகாமல் இருந்தது.

இந்நிலையில் போட்டி அட்டவணை விபரம் இந்தியக் கிரிக்கெட் சபையின் இணையத்தளத்தில் வெளியாகியுள்ளது.

இதன்படி இந்தியா- ஆஸ்திரேலியா அணிகள் இடையிலான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி சென்னை சேப்பாக்கத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி பகல்-இரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது.

எஞ்சிய ஒரு நாள் போட்டிகள் கொல்கத்தா (செப்.21), இந்தூர் (செப்.24), பெங்களூர் (செப்.28), நாக்பூர் (ஒக்ரோபர் 1) ஆகிய இடங்களில் நடக்கவுள்ளது.

அதைத் தொடர்ந்து நடைபெறும் மூன்று 'இருபது-20' போட்டிகள் முறையே ராஞ்சி (அக்.7), கவுகாத்தி (ஒக்.10), ஹைதராபாத் (ஒக்.13) ஆகிய நகரங்களில் நடைபெறவுள்ளது. (ஐ)

## விஷாலுக்கு வில்லியான வரலட்சுமி

விஷால் - மீரா ஜாஸ்மின் - ராஜ்கிரண் ஆகியோர் முன்னணிக் கதாபாத்திரத்தில் நடித்திருந்த சண்டைக்கோழி இரண்டாவது பாகம் தற்போது உருவாகி வருகிறது.

விஷாலின் 25ஆவது படமாக உருவாகி வரும் இப்படத்தில் விஷாலுக்கு ஜோடியாக கீர்த்தி சுரேஷ் நடிக்கிறார். நடிகர் ராஜ்கிரண், சதீஷ் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். மேலும் வரலட்சுமி சரத்குமார் இப்படத்தில் வில்லியாக நடிக்கிறார் எனக் கூறப்படுகிறது. (ஒ)





## விஜயைத் தொடர்ந்து மஜிக் காட்டும் தனுஸ்

இளையதளபதி விஜய் நடிப்பில் அட்லி இயக்கிவரும் 'மெர்சல்' படம், எதிர்வரும் தீபாவளிக்கு வெளியாகவுள்ளது. இதில் முக்கிய விடயமே விஜய் மூன்று வேடங்களில் நடிப்பதுதான்.

அதிலும் விஜய், மாயாஜால மனிதன் (மஜிக் மான்) பாத்திரத்தில் நடிப்பதுதான் மிகுந்த எதிர்பார்ப்புக்குள்ளாகியுள்ளது. இதற்காக மூன்று மஜிக் கலைஞர்களை அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்களாம்.

தற்போது தனுஸ் the extraordinary journey of fakir ஆங்கிலப் படத்தில் நடித்து வருகிறார். இது ரொமான்ஸ் கலந்து காதல் படமாக உருவானாலும் இதில் அஜாத சத்ரு என்ற பாத்திரத்தில் வரும் தனுஷ் மாயாஜால மனிதனாக நடித்திருக்கிறாராம்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொன்றைச் சார்ந்து படங்கள் வெளிவருவது வழமை, அப்போதுதான் வெற்றியைப் பெறமுடியும் என்பதும் உண்மை. அண்மைக்காலமாகப் பேய்ப் படங்களுக்கு மவுசு அதிகமாகவிருந்தது. இனி மாயாஜாலங்களின் காலமாக மாறி விடும் போலிருக்கிறது. (ஒ)

## வவு. வர்த்தக சங்க
# தலைவர் கைது



வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப் பட்டுள்ளார். இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்தபோதே அவர் சில தினங்களுக்கு முன் கைது செய்யப்பட்டுள்ளார். இளைஞர் ஒருவர் கனடா செல்வதற்காக முகவர் ஒரு வருடன் தொடர்பை ஏற் படுத்தியுள்ளார். குறித்த முகவர் வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் ரி.கே.இரா ஜலிங்கத்துக்கு அறி முகமானவர். அதனால் குறித்த இளைஞர் வெளி நாடு செல்வதற்கதான பணத்தை வர்த்தக சங்கத் தலைவரின் வங்கிக் கணக் குக்கு வைப்புச் செய்யு மாறு கோரியுள்ளார். அந்த இளைஞனும் அவ்வாறே வைப்புச் செய்த நிலையில் முகவரால் வெளிநாட்டுக்கு அனுப்பப்படாது ஏமாற் றப்பட்டுள்ளார். இதனையடுத்து குறித்த பணத்தை மீள பெறுவ தற்கு இளைஞர் முயற்சிகளை மேற்கொண்ட போதும் அது பயனளிக்காமையால் கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். குறித்த முறைப்பாடு தொடர்பில் வவுனியா வர்த்தக சங்கத் தலைவரை நீதிமன்றில் ஆஜராகுமாறு அவருக்கு கொழும்பு நீதிமன்றத்தால் அழைப்புக் கட்டளை அனுப்பியி ருந்தது. எனினும் அவர் ஆஜராகியிருக்கவில்லை. இந் நிலையில் அவர் இந் தியா சென்று வந்த போது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (உ)

## உதவி



முதலைக்குழி கரணவாய் தெற்கைச் சேர்ந்த வறிய குடும்பத்தைச் சேர்ந்த ப.சிறி காந்தா என்பவருக்கு வடமாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ் தனது நிதியில் இருந்து துவிச்சக்கர வண்டியை வழங்கி வைத்தார். (உ)

## கெகுலேகங்கை வான்கதவு திறப்பு

அதிக மழைவீழ்ச்சி கார ணமாக கெகுலேகங்கையின் வான் கதவொன்று திறந்து விடப்பட்டுள்ளது. இதன் காரணமாக அகலவத்தை, வலலவத்தை, பலிந்துவர, இங்கிரிய மற்றும் பதுரலிய ஆகிய பிரதேசங்களில் பள்ளமான பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதான மாக இருக்குமாறு எச்ச ரிக்கை விடுக்கப்பட்டுள் ளது. நாட்டின் தென் பகுதியில் சில நாட்களாக கடும்மழை பெய்துவரு கின்றது. இந்நிலையிலேயே குளங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. இதேவேளை, சில பிரதே சங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கையும் விடுவிக் கப்பட்டுள்ளது. (உ)

## இன்றைய கருத்தோவியம்




## அர்ஜுன் எலோசியஸ் ஆணைக்குழு முன் ஆஜர்

பர்பசுவல் ட்ரசரீஸ் நிறு வனத்தின் பணிப்பாளர் அர்ஜுன் எலோசியஸ் இன்று காலை பிணை முறி மோசடிகள் சம்பந்தமாக விசாரணை செய்யும் ஜனா திபதி ஆணைக்குழு முன்னி லையில் ஆஜராகினார். வாக்குமூலம் ஒன்றை வழங் குவதற்காக ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகு மாறு அர்ஜுன் எலோசி யஸுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது. அர்ஜுன் எலோசியஸுக்கு அழைப்பாணை அனுப்பப் பட்டிருந்த போதிலும், அவர் அலுவலகத்திலோ அல்லது வீட்டிலோ இருக்க வில்லை என்று அதிகாரி கள் ஆணைக்குழுவிடம் தெரிவித்திருந்தனர். எனினும் அவரது சட்டத்தர ணிகள்ஊடாக வழங்கப்பட்ட தகவலையடுத்து ஆணைக் குழு முன்னிலையில் ஆஜ ராகியுள்ளதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. (உ)

## அமைதியாக இருக்கமாட்டேன்
# கோத்தா கர்ஜனை



நாடு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் போது நான் தொடர்ந்தும் அமைதியாக இருக்கமாட்டேன் என்று முன்னாள் பாது காப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச எச்சரித்துள்ளார். பொரலஸ்கமுவவில் நேற்று, 'எலிய- ஒளிமயமான அபிலா சைகள்' என்ற அமைப்பை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றிய அவர், "பிரிவினைவாதிகள் தீவிரவாதத்தின் ஊடாக அடைய முடியாததை, புதிய அரசியலமைப்பு வழங்கும். இதனைத் தோற்கடிக்க வேண்டும். விடுதலைப் புலி களின் அனுதாபிகள், புலிகள் ஆதரவு புலம்பெயர் தமிழர்கள், ஒரு பகுதி வெளி நாட்டுச் சக்திகளை திருப்திப்படுத்தவே இந்த அரசியலமைப்பு மறுசீரமைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. போருக்குப் பிந்திய இலங்கையை இன ரீதியாகப் பிரிக்கவே, தற்போதைய கூட்டு அரசாங்கம் வழிதேடுகிறது. பிரிவினை வாத ஆதரவாளர்களைத் திருப்திப் படுத்தும் அரசாங்கத்தின் இந்த முயற் சியை மக்கள் எதிர்க்க வேண்டும். எந்த வொரு சூழ்நிலையிலும் அரசாங்கம் நாட் டைக் காட்டிக் கொடுப்பதற்கு 'எலிய' அமைப்பு அனுமதியாது. நாட்டின் ஒற் றையாட்சியைப் பாதுகாப்பதற்கு, புதிய அரசியலமைப்பைக் கொண்டுவரும் முயற் சிகளுக்கு எதிராக மக்கள் வழி நடத்த வேண்டியது முக்கியம்." - என்றார். (எ)

## சு.க. எம்பிக்களுடன் ஜனாதிபதி ஆலோசனை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கள் சிலருடன் ஜனாதிபதி விசேட சந்திப்பொன்றை மேற்கொண்டுள்ளார். அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் கள் மற்றும் மத்திய செயற் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்ட சந்திப்பொன்று நேற்று இரவு ஜனாதிபதி செய லகத்தில் இடம்பெற்றது. இதில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்ந்தும் அர சாங்கத்தில் செயற்படு வதா? இல்லையா? என்பது தொடர்பிலும், உள்ளூ ராட்சிமன்றத் தேர்தல்கள் போன்ற விடயங்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. மேலும், ஏழு நாடாளு மன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி விசேட சந் திப்பொன்றையும் இதன் போது மேற்கொண்டுள் ளதாக, பிரதி அமைச்சர் அருந்திக்க பெர்ணான்டோ குறிப்பிட்டுள்ளார். (உ)

## அரச அதிகாரிகளுக்கு வாகன அனுமதிப்பத்திரம்

அரச அதிகாரிகளுக்கு வாகன அனுமதிப்பத் திரங்களை மீண்டும் பெற் றுக்கொள்வதற்கான நடைமுறை முன்னெடுக் கப்பட்டமை சிறந்த நோக் கத்துடன் நாட்டின் நலனை கருதியே என்று நிதி மற் றும் ஊடகத்துறை அமைச் சர் மங்கள சமரவீர தெரி வித்தார். நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற உற் பத்தி தொடர்பான வரி விசேட கட்டளைகள் குறித்த விவாதத்தில் இந்த விடயத்தை குறிப்பிட் டார். இதேபோன்று நிவாரண அடிப்படை யிலான வாகன அனுமதிப் பத்திர முறையினை தாம தித்தாயினும் மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமை மகிழ்ச்சி அளித்ததாகவும் அமைச் சர் இதன்போது தெரிவித் தார். (உ)

# அலுவலகம் அமைக்க
## எம்.பிக்களுக்கு கொடுப்பனவு

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவ ருக்கும் மாதாந்தம் ஒரு இலட்சம் ரூபா மேல திகக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது. அவர்கள் தமக்கான அலுவலகம் ஒன்றை பராமரிக்க மாதாந்தம் இந்தக் கொடுப்ப னவு வழங்கப்படவுள்ளதாக குறிப்பிடப்பட் டுள்ளது. இது தொடர்பில் திறைசேரியில் நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான குறை நிரப்புப் பிரேரணை ஒன்று நாடாளுமன்றத் தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (உ)

## மண்சரிவு - மழை
# எச்சரிக்கை

நாட்டில் சில பகுதிகளில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடைமழை கார ணமாக ஐந்து மாவட்டங் களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட் டுள்ளது. இரத்தினபுரி, களுத் துறை, காலி, கேகாலை, நுவரெலியா ஆகிய மாவட் டங்களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தி னால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, நாட்டின் சில மாகாணங்களில் சுமார் 100 - 150 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி கிடைக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. இதன்படி, மேல், சப்ரக முவ மற்றும் மத்திய மாகா ணங்களிலேயே இவ்வாறு அதிக மழை பெய்யலாம் என எதிர்பார்க்கப்படு கின்றது. (உ)

## நாளை நாளும் கோளும்

08.09.2017 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆவணி மாதம் 23 ஆம் நாள்

துதியை மு.ப. 11.42 வரை | உத்தரட்டாதி பி.ப. 02.14 வரை | சித்தாந்தயோகம்

இராகுகாலம் 10.34 - 12.04 | சுபநேரம் 06.04 - 07.34 | எமகண்டம் 03.04 - 04.34

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செலவு | பெருமை | சுபம் | பயம் | சினம் | வெற்றி | போட்டி | அமைதி | சுகம் | வரவு | ஆதரவு | புகழ் |

எதிரொலி
Ethiroli

# அந்த நாள் ஞாபகம்.....!



## 1999.09.07

இலங்கை இராணுவத்தினரால் நூற்றுக்கணக் கான தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டு, யாழ்ப் பாணம் செம்மணியில் புதைக்கப்பட்ட விவகாரம் வெளிவந்தது.









# நினைவஞ்சலி

யாழ்ப்பாணம் செம்மணியில் இராணு வத்தினரால் கைது செய்யப்பட்டு படு கொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மாணவியான செல்வி குமாரசாமி கிருசாந் தியின் 21 ஆவது ஆண்டு நினைவுநாள் இன்று செம்மணிப் பகுதியில் அனுஷ்டிக் கப்பட்டுள்ளது. இதன் போது வறுமை யிலுள்ள பாடசாலை மாணவர்கள் 21 பேருக்கு துவிச்சக்கர வண்டிகளும் 63 மாண வர்களுக்கு புத்தகப் பைகளும் வழங்கி வைக் கப்பட்டுள்ளன. (உ- 1)

## இந்திய மீனவர் நால்வருக்கு

# விளக்கமறியல் நீடிப்பு

எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைதான இந்திய மீனவர் கள் நால்வரினதும் விளக்க மறியலை, மீண்டும் 14 நாட்கள் நீடித்து, பருத்தித் துறை நீதவான் நளினி கந்தசாமி, இன்று உத்தர விட்டார். கடந்த மாதம் 20ஆம் திகதி, பருத்தித் துறை கடற்பரப்பினுள் நுழைந்து மீன்பிடித்த போது, குறித்த மீனவர் களை காங்கேசன்துறை கடற்படையினர் கைது செய்திருந்தனர். அவர்கள் மேலதிக சட்ட நடவ டிக்கை நிமித்தம், கடற் றொழில் நீரியல்வளத் துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். இந்நிலையில், குறித்த மீனவர்களின் வழக்கு, இன்று பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. இதன்போது, மீனவர்களை விடுவிப்பதற்குரிய ஆலோ சனை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து கிடைக்கவில்லை என அறிக்கை சமர்ப்பிக் கப்பட்டது. இதையடுத்தே, விளக்கமறியல் நீடிக்கப் பட்டு உத்தரவு பிறப்பிக் கப்பட்டது. (உ)

# பாட்டனாரை நினைவுகூர யாழ்.வந்த இந்தியத் தளபதி

இந்திய விமானப்படையில் தளபதியாக இருந்து ஓய்வு பெற்ற ரஞ்சன் காந்தி என்பவர் கரவெட்டி விக் னேஸ்வரா கல்லூரிக்கு இன்று பயணம் மேற்கொண்டி ருந்தார். அவரது பாட்டனார் விக்னேஸ்வராக் கல்லூ ரியில் ஆசிரியராகக் கடமையாற்றியிருந்தார். அவர் கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது படசாலையில் வைக்கப்பட்டிருந்த அவரது பாட்டனாரின் உருவப் படத்துக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். ரஞ்சன் காந்தியின் வருகையை நினைவுகூர்ந்து அவருக்கு நினைவுப் பரிசினையும் பாடசாலை சமூகத்தினர் வழங்கி வைத்தனர். (உ-11)



# உண்ணாவிரத போராட்டம்




அடக்குமுறைக்கு எதிரான ஜனநாயகக்கட்சியின் தலை வரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ் தருமான மு.தம்பிராஜா, காரைநகர் பிரதேச செயலகத்துக்கு முன் னால் இன்று உண்ணா விரத கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன் னெடுத்துள்ளார். மாதாந் தம் கொடுக்க வேண்டி யிருந்த சமுர்த்தி முத்திரை கட்டாயக் கொடுப்பனவு கள் வழங்கப்படாமையைக் கண்டித்தே அவர் உண்ணா விரதமிருப்பதாகக் குறிப் பிடப்பட்டுள்ளது. (உ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**செம்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிருசாந்தியுடன் சேர்த்து படுகொலை செய்யப்பட்ட ஏனையவர்களும் இதன் போது நினைவு கூரப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. படுகொலை செய்யப் பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் உள்ளிட்ட பலர் குறித்த நினைவேந்தலில் கலந்துகொண் டிருந்தனர்.

கிருசாந்தி குமாரசாமி சுண்டுக்குளி மக ளிர் கல்லூரியின் மாணவி. அவர் பாடசாலை யிலிருந்து வீடுதிரும்பியபோது 1996ஆம் ஆண்டு புரட்டாதி 7ஆம் திகதி செம்மணி முகாமிலுள்ள இராணுவத்தினரால் தடுக் கப்பட்டிருந்தார்.

பின்னர் அவர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தி படுகொலை செய்யப்பட்டி ருந்தார்.

செம்மணி இராணுவ முகாமில் கிரு ஷாந்தியை தடுத்து வைத்திருந்ததை கண் ணுற்ற ஊரவர்கள் மாணவியின் தாயாருக்கு தகவல் கொடுத்தனர். மாணவியைத் தேடி செம்மணி இராணுவ முகாமுக்குச் சென்ற தாயாரான ஆசிரியை குமாரசாமி இரா சம்மா (வயது-59) மாணவியின் சகோத ரனான யாழ்.பரியோவான் கல்லூரி மாண வனான குமாரசாமி பிரணவன் (வயது-16) மற்றும் மாணவியின் வீட்டுக்கு அயலில் வசிக்கும் தென்மராட்சி பல நோக்கு கூட் டுறவு சங்கத்தில் உதவியாளராக கடமையாற்றிய சிதம்பரம் கிருபா மூர்த்தி (வயது-35 ) ஆகியோரையும் இராணுவத்தினர் படுகொலை செய்தனர். அன்றையதினம் நள்ளிரவு படுகொலை செய்யப்பட்ட நால்வரின் உடல்களையும் செம்மணி பகுதியில் உள்ள வயல் வெளி யில் இராணுவத்தினர் புதைத்தனர். அதேவேளை, யாழில் அக்கால பகுதியில் கடத்தப்பட்டவர்கள், காணாமல் ஆக்கப் பட்டவர்கள் என சுமார் 600 பேருக்கும் அதிகமானவர்கள் செம்மணி வயல் வெளி களில் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டனர். பின் னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக ளில் புதைகுழிகள் தோண்டப்பட்ட போது இவ்விடயங்கள் வெளிக்கொணரப்பட் டிருந்தன. (உ-01)

**200...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசியல்வாதிகள் சென்று வாக்குறு திகளை வழங்கியுள்ள போதிலும் அவை நிறைவேற்றப்படாமல் இரவு பகலாக போராட்டம் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. (எ)

**மகிந்த...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பரிந்துரை செய்யவில்லை. அதற்குக் கீழாக, உள்நாட்டு விசாரணைகள் முன் னெடுக்கப்பட வேண்டும் . 2 இலட்சத் துக்கும் அதிகமான இராணுவத்தினர் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்றே கூறுகின்றேன். இந்தச் சூழலில், எப்படி மகிந்த ராஜபக்ச எனக்கு எதிராக கை உயர்த்த முடியும்? நம்பிக்கை யில்லாப் பிரேரணையை எதிர்கொள் வதற்கும் நான் தயாராக இருக்கிறேன். நான் சவால்களை விரும்புகிறேன். சவால்கள் வரும் போது, என்ன நடக்கிறது என்று பார்த்துக் கொள்ளலாம்” என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

**ஒழுங்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவைத் தலைவர் சிவஞானம், சபையின் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களின் சபைச் செயற்பாடுகள் குறித்து கடுமை யான அதிருப்தியை வெளியிட்டார். “மாகாண சபையின் முதலமைச்சர், சபையின் மரபுகளுக்கமையவும் சபைக் கட்டுப்பாடுகளை மதித்து, அதனைப் பின்பற்றிச் சரியான முறையில் செயற்பட்டு வருகின்றார். “ஆனால், அவர் சார்ந்த அமைச்சர்கள் அவ்வாறு நடப் பதில்லை. அதேபோன்று, தான் உறுப் பினர்களும் சபைக் கட்டுப்பாடுகளுக் கேற்ப நடப்பதில்லை என்றார்.

அமைச்சர் அனந்தி சசிதரன் தனது விடுமுறை அறிவிப்பை முதலமைச்சர் ஊடாக ஆளுநருக்கு அனுப்பிவைத்து விட்டு அதன் கொப்பியை அவைத் தலை வருக்கு அனுப்பியிருந்தார். அது தொடர் பில் சீற்றமடைந்த அவைத் தலைவர் அவைத்தலைவருக்கே விடுமுறை அறி விப்பு அனுப்பவேண்டும். எமக்கு கொப்பி போடவேண்டும் என்றார். இதற்குப் பதி லளித்து உரையாற்றி அமைச்சர் அனந்தி சசிதரன் அமைச்சர்களின் விடுமுறை அறி விப்புத் தொடர்பில் தனக்கு நடைமுறை தெரியாது எனவும் செயலாளர்கள் கூறிய வாறு நடந்துகொண்டதாகவும் தெரிவித்து, தலைவர் கூறியவாறான நடைமுறையைப் பின்பற்றுவதாகவும் அமைச்சர் அனந்தி சசி தரன் இதன்போது குறிப்பிட்டார். (உ-01)

**வடக்கு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலையில் இன்று இறுதித் தீர்மானம் எடுப்பதென தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய வடமாகாண சபையின் 105 ஆவது அமர்வு இன்று வியாழக்கிழமை அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

சபையில் 20ஆவது திருத்தச் சட்டம் விவாதத்துக்கு எடுக்கப்பட்ட போது, அதனை நிராகரிப்பதாகவும், அவ்வாறு அதில் திருத்தம் வந்தால், அது தொடர்பில் சபை பரிசீலிக்கும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார். அதனடிப்படையில், வடமாகாண சபை ஏகமனதாக 20ஆவது திருத்தத்தை நிராகரித்தது. இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சி ஒரு சில திருத்தங்களுடன் 20 ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரிக்கப்போவதாக அறிவித் திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-01)

**மகிந்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு தலா 50 மில்லியன் ரூபா செலுத்த வேண் டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. கடந்த ஜனாதிபதி தேர்தல் காலப் பகுதி யில், சமய அனுட்டானத்துக்கான ‘சில்’ ஆடைகளை வழங்குவதற்காக, தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவிலிருந்து 600 மில்லியன் ரூபா நிதி மோசடி செய்தனர் என்ற குற்றச்சாட்டில், சட்டமா அதிபரினால், மேற்குறித்த இருவருக்கு எதிராகவும் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. (எ)

**முள்ளிவாய்க்காலில்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பரபரப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

போர் விமானங்கள் தாழ்வாகப் பறப்ப தென்பது வடக்கு மக்களுக்கு புதிய விட யம் அல்ல. எனினும் யுத்தம் முடிவடைந்து நீண்ட கால வருடங்களின் பின் இவ்வாறு பறப்பது பழைய சகப்பான நினைவுகளை மனதில் நினைவுபடுத்தியதாகவும் அது ஒருவித அச்ச உணர்வைத் தோற்றுவித் ததாகவும் அப்பகுதி மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (எ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 07.09.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.